RNI-N0: TNTAM/2021/83936





# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





சிவகங்கை | மலர்-4 | இதழ்- 313 | நவம்பர்.13 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## வெற்றிக் கோப்பை சின்னம் கேட்டு தமிழக வெற்றிக் கழகம் மனு



சென்னை, நவ.13-

ஆட்டோ, கிரிக்கெட் பேட், விசில், வெற்றிக் கோப்பை உள்ளிட்ட சின்னங்களில் ஒரு சின்னத்தை ஒதுக்குமாறு தேர்தல் ஆணையத்தில் தவெக நிர்வாகிகள் மனு அளித்துள்ளனர்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்களே இருப்பதால், தமிழக வெற்றிக் கழகம் (தவெக) தலைவர் விஜய் பல்வேறு வியூகங்களை வகுத்து வருகிறார். சமீபத்தில் நடைபெற்ற தவெக பொதுக்குழு கூட்டத்தில் முதல்வர் வேட்பாளர் விஜய் தான் எனவும், கூட்டணி குறித்து முடிவை கட்சியின் தலைவர் விஜய் எடுப்பார் என்றும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. கரூர் சம்பவத் துக்கு பிறகு அதிமுக பாஜக கூட்டணியில் விஜய் இணைய வாய்ப்புள்ளதாக அரசியல் விமர்சகர்கள் பலர் தெரிவித்து வந்த நிலையில், தவெகவின் பொதுக்குழு தீர்மானம் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில், மீண்டும் விஜய் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மக்களை சந்திப்ப தற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. அதற்காக, கட்சியில் பல்வேறு மாற்றங்களை விஜய் செய்து வருகிறார். இந்நிலையில், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட வுள்ள தவெக கட்சிக்கு சின்னம் ஒதுக்கக்கோரி, அக்கட்சியின் நிர்வாகிகள் டெல்லியில் உள்ள தேர்தல் ஆணையத்தில் நேற்று மனு அளித்தனர். தவெக கொடுத்துள்ள பொதுவான 10 சின்னங்கள் அடங்கிய பட்டியலில் ஆட்டோ, கிரிக்கெட் பேட், விசில் சின்னம் இடம் பெற்றுள்ளது.

இதுதொடர்பாக தவெக நிர்வாகிகளிடம் கேட்ட போது, "வேட்டைக்காரன் படத்தில் விஜய் ஆட்டோ ஓட்டுவார். பைரவா படத்தில் விஜய் கிரிக்கெட் விளையாடுவார். பிகில் படத்தில் விஜய் கபடி பயிற்சியாளராக விசிலுடன் இருப்பார். அதேபோல் பிகில் படத்தில் 'கப் முக்கியம்' என்று விஜய் சொல்வார். அதனால், வெற்றிக் கோப்பை சின்னமும் கேட்டுள்ளோம். இந்த நான்கு சின்னமும் விஜய்க்கு மிகவும் பிடித்த சின்னமாக உள்ளது. இதில், ஏதாவது ஒரு சின்னம் தேர்தல் ஆணையம் ஒதுக்கினால், சின்னத்தை எளிதாக மக்களிடம் கொண்டு சேர்க்க முடியும்" என்றனர்.

மக்கள் நீதி மய்யம்: இதற்கிடையே, பொது சின்னம் ஒதுக்கக்கோரி மக்கள் நீதி மய்யம் கட்சியும் தேர்தல் ஆணையத்திடம் விண்ணப்பித்துள்ளது.

2026 தமிழக சட்டப் பேரவை தேர்தலில் மக்கள் நீதி மய்யம் சார்பில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களுக்காக விருப்பப்பட்ட 10 சின்னங் களின் பட்டியலில் இருந்து ஒரு பொதுச்சின்னத்தை ஒதுக்குமாறு இந்திய தேர்தல் ஆணையத்திடம் மக்கள் நீதி மய்யம் சார்பில் நேற்று விண்ணப்பிக்கப் பட்டுள்ளது. மக்கள் நீதி மய்யம் கட்சியின் பிரதிநி திகள் டெல்லியில் உள்ள தேர்தல் ஆணைய அலு வலகத்தில் ஆணைய அதி காரிகளைச் சந்தித்து, விண் ணப்பத்தை அளித்தனர்.

## ஆப்பரேஷன் சிந்தூர் 2.0க்கும் தயார் ராணுவ ஜெனரல் உபேந்திரா திவேதி



புதுடில்லி: நவ.13-

ஆப்பரேஷன் சிந்தூர் 2.0 அல்லது வேறு எந்தப் போராக இருந்தாலும், ஆப்பரேஷன் சிந்தூரில் மேற்கொள்ளப்பட்ட யுக்திகளை மீண்டும் பயன்படுத்துவதற்கு தயாராக இருப்பதாக ராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் உபேந்திரா திவேதி தெரிவித்துள்ளார்.

டில்லியில் நடந்த பாதுகாப்பு மாநாட்டில் அவர் பேசியதாவது; வரும் 2027ம் ஆண்டிற்குள் செயற்கை நுண்ணறிவு தொடர்பான துறைகளில் 23 லட்சம் வேலைவாய்ப்புகள் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. ஆனால் திறமை வாய்ந்தவர்கள் அதில் பாதி மட்டுமே இருப்பார்கள்.

இந்திய ராணுவத்திற்கு இந்தத் தேவையை அவுட்சோர்ஸ் செய்ய வேண்டுமென்றால், அதன் செலவு மிக அதிகமாக இருக்கும். எனவே, இதனை நாம் இன்றே தொடங்குவது முக்கியம். இந்திய ராணுவம் மற்றும் பள்ளிகளுக்கு ஏஐ நிபுணர்கள் தேவை. ஏனெனில் தேவை அதிகமாகவும், திறமை குறைவாகவும் இருக்கிறது.

முப்படைகளுக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதற்கான கொள்கைகளைக் கொண்ட பாதுகாப்பு கொள்முதல் கையேடு, இந்த மாதம் வெளி யிடப்பட்டது.

பாதுகாப்புத்துறையை மேம்படுத்தும், உள்நாட்டு தற்சார்பை அதிகரிக்கும் நடைமுறை வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. டிசம்பர் மாதத்திற்குள் அனைத்தையும் இறுதி செய்து விடுவோம். அரிதான பொருட்களை குறைந்தபட்சம் அடுத்த நான்கு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு இறக்குமதி செய்யப்பட வேண்டியிருக்கும்.

2019ம் ஆண்டு முதல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக மட்டும் 2.1 லட்சம் கோடியை இந்திய ராணுவம் முதலீடு செய்துள்ளது. இது ஒரு பெரிய சவால். நாங்கள் பொறுமையாக, படிப்படியான வளர்ச்சியை எதிர்நோக்கியுள்ளோம். நமது பாரம்பரிய அமைப்புகளை உடனடியாக மாற்ற முடியாது. அதனை மாற்ற குறைந்தபட்சம் 5 அல்லது 7 ஆண்டுகள் ஆகலாம். மாற்றங்கள் மூலம் அதனை சக்திவாய்ந்ததாக மாற்ற வேண்டும்.

தேசிய அளவிலான திட்டங்களுடன் நாங்கள் ஒருங்கிணைந்து பயணிக்கிறோம். இந்தியா ஏஐ திட்டத்தில் நாங்கள் ஏற்கனவே கையெழுத்திட்டு விட்டோம். அதேபோல, விண்வெளி, குவாண்டம் மற்றும் 6ஜி திட்டங்களிலும் நாங்கள் இணைந்து பணியாற்றி வருகிறோம்.

திறந்த மூல பகுப்பாய்வு மற்றும் முன்கணிப்பு பகுப்பாய்வு ஆகியவை ஆப்பரேஷன் சிந்தூர் 1.0ல் எங்களுக்கு மிகவும் உதவியது. இந்தியா மட்டுமின்றி வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களும் எங்களுக்கு உதவினர்.

ஆப்பரேஷன் சிந்தூர் 1.0ல் நாங்கள் மிகவும் அதிகாரம் படைத்தவர்களாக இருந்தோம். நிறைய பாடங்களைக் கற்றுக்கொண்டோம். எனவே, ஆப்பரேஷன் சிந்தூர் 2.0 அல்லது வேறு எந்தப் போராக இருந்தாலும், இந்த திட்டங்களை சிறப்பாக பயன்படுத்துவதற்கு தயாராக இருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## கலப்பட நெய் விவகாரத்தில் திருப்பதி தேவஸ்தான முன்னாள் அதிகாரி தர்மா ரெட்டியிடம் விசாரணை



திருப்பதி, நவ.13-

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் ஜெகன் மோகன் ரெட்டியின் ஆட்சிக் காலத்தில், டெண்டர் மூலம் கலப்பட நெய் வாங்கியது தொடர்பாக சிபிஐ தலை மையிலான சிறப்பு விசா ரணை குழு விசாரணை நடத்தி வருகிறது.

உத்தராகண்ட் மாநிலத் தில் உள்ள போலேபாபா ஆர்கானிக் டெய்ரி நிறு வனத்திற்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டு அவர்கள் ரூ.250 கோடிக்கு 68 லட் சம் கிலோ நெய்யை விநி யோகம் செய்ய வேண் டும். ஆனால், 2022ல் இவர் கள் விநியோகம் செய்த நெய் தரமற்றதாக உள்ள தாக அப்போதைய அறங் காவல் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவர் களை பிளாக் லிஸ்டில் வைத்தாலும், ஒரு லிட் டர் பால் கூட தயாரிக்காத இதே நிறுவனம் தொடர்ந்து 2024 ஜூன் மாதம் வரை கலப்பட நெய்யை விநி யோகம் செய்துள்ளது.

இதுதொடர்பாக திண் டுக்கல் ஏஆர் டெய்ரி, திருப்பதி வைஷ்ணவி டெய்ரி, உத்தர பிரதேசத் தில் உள்ள மால் கங்கா டெய்ரி ஆகியோரிடமும் சிறப்பு ஆய்வு குழு விசா ரணை நடத்தி பலரை கைது செய்துள்ளது.

இந்நிலையில், அந்த கால கட்டத்தில் நிர்வாக அதிகாரியாக கோலோச் சிய தர்மாரெட்டியை நேற்று சிறப்பு ஆய்வு குழு திருப்ப தியில் உள்ள அலுவலகத் தில் வைத்து விசாரணை நடத்தியது. நெய்யின் தரத்தை எவ்வாறு ஆய்வு செய்தீர்கள்? போலே பாபா டெய்ரி நிறுவனத்தை பிளாக் லிஸ்டில் வைத்த பின்னரும் எப்படி அவர்கள் மூலமாகவே நெய் விநி யோகம் ஆனது? பக்தர்கள் தொடர்ந்து லட்டு பிரசாதம் குறித்து குற்றச்சாட்டுகளை முன் வைத்தும் ஏன் அவற் றின் மீது நடவடிக்கை எடுக் கவில்லை? என்பது போன்ற பல கேள்விகள் தர்மா ரெட் டியிடம் கேட்கப்பட்டதாக தெரிகிறது.

## போலி வாக்காளர்கள் ஓட்டுப் போட்டுத்தான் கொளத்தூரில் ஸ்டாலின் ஜெயித்தாரா? நிர்மலா சீதாராமன் கேள்வி




புதுடெல்லி, நவ.13-

தமிழ்நாட்டில் முதல் வர் ஸ்டாலின் போட்டி யிட்ட கொளத்தூர் தொகு தியில் மட்டும் 4,379 போலி வாக்காளர்கள் கண்டறியப் பட்டுள்ளனர் என்று மத் திய நிதியமைச்சர் நிர் மலா சீதாராமன் தெரிவித் துள்ளார். அவர்கள் ஓட்டுப் போட்டுத்தான் ஸ்டாலின் வெற்றி ஜெயித்தாரா? என் றும் அவர் கேள்வி எழுப்பி உள்ளார்.

பாஜக கோவை கோட்ட அணி பிரிவுகள், மாநில மற்றும் மாவட்ட நிர்வாகி கள் கூட்டம் கோவையில் நேற்று நடந்தது. மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதா ராமன் தலைமை வகித் தார். மாநில தலைவர் நயி னார் நாகேந்திரன், தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன் ஆகி யோர் முன்னிலை வகித் தனர்.

தொடர்ந்து செய்தி யாளர்களிடம் மத்திய நிதி யமைச்சர் நிர்மலா சீதாரா மன் கூறியதாவது: ஜிஎஸ்டி வரி மாற்றம் செய்யப்பட் டதால் பல்வேறு பொருட் களின் விலை குறைந்துள் ளது. தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப் பின் சார்பில் நடத்தப்படும் பாராட்டு விழாவில் கலந்து கொள்ள கோவை வந்துள் ளேன். தமிழ்நாடு முழு வதும் 'எஸ்ஐஆர்' பணி களுக்கு எதிர்ப்பு தெரி வித்து திமுக போராட்டம் நடத்துவது ஆச்சரியம் அளிக்கிறது. இந்நடவடிக் கையை பாஜக கொண்டு வந்தது போல் திமுகவினர் பேசுகின்றனர். கடந்த 1952 ம் ஆண்டு முதல் 13 முறை 'எஸ்ஐஆர்' நடைபெற்றுள் ளது. அப்போது காங்கிரஸ் கூட்டணியில் இருந்த திமுக எதுவும் செய்யாமல், தற் போது மட்டும் ஏன் போராட் டம் நடத்துகிறது. முதல்வர் ஸ்டாலின் என்ன சொல்கி றோம் என புரியாமல் ஒரு வீடியோ வெளியிட்டுள்ளார். துணை முதல்வர் உதயநிதி 'எஸ்ஐஆர்' என்றால் என்ன என தெரியாமல் 'ரிவிஷன்' 'என்பதை 'ரெஸ்ட்ரிக் ஷன்' என சொல்கிறார்.

தங்களின் ஆட்சியின் தோல்விகளை மறைக்க திமுக இது போன்ற நிலைப் பாட்டை எடுத்து வரு கிறது. எதிர்க்கட்சிகளோ, பாஜகவோ வெற்றி பெற் றால் 'இவிஎம்' இயந்திரங் கள் மீது குற்றம்சாட்டுகின்ற னர். திமுக வெற்றி பெறும் போது எதுவும் எதிர்த்து பேசுவதில்லை. பிஹாரில் தேர்தல் நடைபெறும் நிலையில், ராகுல் காந்தி ஹரியானாவில் வாக்கு திருட்டு நடந்துள்ளது என பேசுகிறார். தமிழ்நாட்டில் கொளத்தூர் தொகுதியில் மட்டும் 4,379 போலி வாக் காளர்கள் கண்டறியப்பட் டுள்ளனர். ஒரே பெயர், ஒரே சொந்தக்காரர்கள் பெயர், ஒரே வயது. இருப் பினும் அட்டை எண்கள் மட் டும் வேறு. 933 வாக்காளர் கள் போலி முகவரியில் உள்ளனர். இதுபோன்ற முறைகேடுகளை நீக்க வேண்டாமா. கொளத்தூர் தொகுதியில் இத்தகைய முறைகேடுகளால் தான் ஸ்டாலின் வெற்றி பெற் றாரா என நாங்கள் கேட் கலாமா.

தற்போது கண்டறியப் பட்டுள்ள முறைகேடு களை நீக்க வேண்டா மா. பிஹாரில் 22 லட்சம் வாக்காளர்கள் இறந்தவர் கள். இருப்பினும் வாக் காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். 7 லட்சம் வாக்காளர்கள் ஒரு இடத் தில் மட்டுமின்றி மேலும் வேறு இடத்திலும் பெயர் பதிவு செய்துள்ளனர். 35 லட்சம் பேர் நிரந்தரமாக பிஹாரை விட்டு வெளியேறி விட்டோம் என கூறியுள் ளனர். பிஹாரில் மட்டும் 64 லட்சம் பேரின் பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்க கூடாது. அதற்கு தான் தேர்தல் ஆணை யம் நடவடிக்கை மேற் கொண்டுள்ளது. இரண் டாவது கட்டமாக தேர்தல் ஆணையம் 9 மாநிலங் கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் 'எஸ்ஐஆர்' பணிகளை மேற்கொள்ள உள்ளது. இந்திய அரசி யலமைப்பு சட்டத்திலும் தேர்தல் ஆணையத்திற்கு இந்த அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

இந்திய ஏற்றுமதியாளர் கள் மீது அமெரிக்க அதிபர் 50 சதவீத வரி விதிப்பு அமலுக்கு வந்து 3 மாதங் கள் கடந்த நிலையில் சலுகை திட்டங்கள் அறிவிப் பது தொடர்பாக தொழில் துறையினருடன் பேசி வரு கிறோம். விரைவில் அறி விப்பு வெளியிடப்படும். இவ்வாறு அவர் தெரிவித் தார்.



## நவ.22ல் பணகுடி அருகே நாதக சார்பில் மாடு மேய்க்கும் போராட்டம்

சென்னை, நவ.13-

நெல்லை மாவட்டம் பணகுடி அருகேயுள்ள மகேந்திரகிரி மலையில் தடையை மீறி வரும் 22ம் தேதி மாடு மேய்க்கும் போராட்டம் நடைபெற உள்ளதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவித்துள்ளார்.

மேலும், அதே பகுதியில் வன உரிமை கிராம சபை அறிவிப்பு பதாகையையும் அவர் திறந்துவைப்பார் என்று நாதக நிர்வாகிகள் தெரி வித்துள்ளனர்.

## தொடர் மழையால் குறுமிளகு விவசாயம் பாதிப்பு

பந்தலூர், நவ.13-

பந்தலூர் சுற்று வட்டாரப்பகுதியில் தொடர்மழையால் குறுமிளகு விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம், பந்தலூர் மற்றும் கூடலூர் கேரளா மாநிலம் வயநாடு மாவட்டங்களில் தேயிலை, காப்பி செடிகளுக்கு இடையே சில்வர்வொக், பலா மரங்கள் மற்றும் காட்டு மரங்களில் குறுமிளகு கொடிகள் ஊடு பயிர்களாக வளக்கப்பட்டு விவசாயிகள் பயனடைந்து வந்தனர்.

மருத்துவ குணம் கொண்ட குறுமிளகு சமையல் உள்ளிட்ட பல்வேறு விதங்களில் பயன்படுகின்றது. கறிமுண்டா, வயநாடன், பன்னீயூர் உள்ளிட்ட ரகங்கள் இப்பகுதியில் அதிக அளவில் பயிர் செய்து வருகின்றனர். இந்த ஆண்டு பருவமழை பருவம் தவறி பெய்ததால் குறுமிளகு செடிகள் காய்ந்தும், வாடல் நோய் உள்ளிட்ட நோய் தாக்கம் காரணமாக மகசூல் இல்லாமல் விவசா யிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விவசாயிகளுக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்கி குறுமிளகு விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு துறை சார்ந்த அதிகாரிகள் நடவடிக்கை இல்லை என விவசா யிகள் கூறுகின்றனர்.எனவே இப்பகுதியில் உள்ள விவசா யிகளுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கி குறுமிளகு விவசாயிகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 19,908 பேர் ஆசிரியர் தகுதி தேர்வு எழுதுகின்றனர் முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை

கடலூர், நவ.13-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதி தேர்வு (TNTET I&II) நடைபெறவுள்ளதை முன்னிட்டு, முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

அப்போது ஆட்சியர் கூறுகையில், ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் 2025ம் ஆண்டிற்கு ஆசிரியர் தகுதி தேர்விற்கான (TN-TET) தாள்1 தேர்வு வரும் 15ம் தேதி மற்றும் தாள் II தேர்வு 16ம் தேதி நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கான தாள்1ஐ மாவட்டத்தில் 65 தேர்வு மையங்களில் 19,908 தேர்வர்கள் தேர்வு எழுத உள்ளனர்.

தேர்வர்கள் தேர்வு மைய அனுமதி சீட்டுடன் தேர்வு மையத்திற்கு குறித்த நேரத்திற்குள், தங்களுடைய ஆதார் அட்டை, கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமம் ஆகியவ ற்றின் ஏதேனும் ஒன்றின் நகல் உடன் வருகைபுரிய வேண்டும். அனைத்து தேர்வு மையங்களிலும் கண்காணிப்பு கேமரா மூலம் தேர்வுகளை கண்காணிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும் தேர்வு மையங் களில் எவ்வித புகார்க ளுக்கும் இடமளி க்காத வகையில் பள்ளிக் கல்வித் துறை மூலம் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தேர்வு நடைபெறும் நாட்களில் தடையில்லா மின்சாரம் வழங்கிடவும், மாணவர்கள் தேர்வு மைய ங்களுக்கு உரிய நேரத்தில் சென்றிட தேவையான போக்குவரத்து வசதி, மின்சாரம் சார்ந்த நடவடிக்கைகளை மேற் கொள்ள வருவாய் துறை, காவல்துறை, சுகா தாரத்துறை உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது, என்றார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், துணை ஆட்சியர் டியுக் பார்க்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் கோரிப்பாளையம் மேம்பாலம் கட்டுமான பணிகளை மாண்புமிகு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.வை.வேலு அவர்கள் இன்று (12112025)ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப. அவர்கள், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.கோ.தளபதி அவர்கள், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.பூமிநாதன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



# கோவையில் யூனியன் பேங்க் ஆப் இந்தியா 107 வது நிறுவன தின விழா

கோவை, நவ.13-

கோவை நவ இந்தியா பகுதி இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி டாக்டர் அப்துல் கலாம் அரங்கில் யூனியன் பேங்க் ஆப் இந்தியா 107வது நிறுவன தின விழா கோவை மண்டல தலைவர் எஸ்.ஏ.ராஜ்குமார் மற்றும் பிராந்திய தலைவர் எஸ்.எஸ்.லாவண்யா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்தியாவின் முன்னணி பொதுத்துறை வங்கிகளில் ஒன்றான யூனியன் பேங்க் ஆப் இந்தியா, 11-11-1919 அன்று சேத் சீதாராம் பொதார் நிறுவினார்.அன்று மகாத்மா காந்தியால் துவக்கி வைக்கப்பட்டது. வங்கியின் 107வது நிறுவன தின விழா கோவை, மும்பை உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு நகரங்களிலும் உற்சாகமாக கொண்டாடிவருகின்றனர்....

மும்பை விழாவில் நிதித்துறை சேவைகள் செயலர் நாகராஜு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு வளரும் பாரதத்தின் தொலை நோக்கு இயக்கத்திற்கு உதவிடும் இயக்கத்தின் இந்த ஆண்டின் கருப் பொருளான ஒன்றிணைந்து ஒளிரும் எதிர்காலத்தை உருவாக் குவோம் என்ற தலைப்பில் உரையாற்றியுள்ளதாகவும் இந்நிகழ்விற்கு வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் ஆஷீஸ் பாண்டே தலைமை தாங்கியுள்ள நிகழ்ச்சியில் செயற்குழு இயக்குநர்கள் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளதாக வங்கியின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வங்கி பணியாளர்களின் இசைக்கச்சேரி நடனம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் வாடிக்கையாளர்கள், வங்கி பணியாளர்கள் மேனாள் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உட்பட ஏராளமானோர் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், சூரக்கோட்டை ஊராட்சி, இடையார்வலசை கிராமத்தில்

# மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் ஊரணியில் மீன்கள் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் துவக்கிவைத்து பார்வையிட்டார்

இராமநாதபுரம், நவ.13-

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், சூரக் கோட்டை ஊராட்சி, இடையார் வலசை கிராமத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் ஊர ணியில் மீன்கள் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் துவக்கிவைத்து பார்வையிட்டார்.

சூரக்கோட்டை ஊராட்சி, இடையார்வலசை கிராமத்தில் 3.0 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட ஐயர்மடம் ஊரணியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் 6,000 எண்ணங்கள் மீன்குஞ்சுகள் ஊரணியில் விடப்பட்டு மீன்கள் வளர்க்கும் திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 80 ஹெக்டேர் பரப்பளவில் மீன்கள் வளர்க்க இலக்கீடு நிர்ணயிக் கப்பட்டு இத்திட்டம் துவங்கப் பட்டுள்ளது. இத்திட்டமானது மீன்வளத்துறை மூலம் கிராமப்புறங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட் சித்துறை கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் திட்டம் செயல்படுத்தப்பட்டு, மீன்கள் உற்பத்தியை அதிகரிக்கும் வகை யில் இத்திட்டம் செயல் பட்டு வருகிறது. தேர்வு செய்யப்பட்ட ஊராட்சிகளில் உள்ள நீர் நிலையங்களில் மீன்கள் உற்பத்தியை அதிகரித்து பயன்பெற்றிட வேண்டும் என செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மீன்வளத்துறை துணை இயக்குநர் திரு.வேல் முருகன் அவர்கள், உதவி இயக்குநர் திரு.இராஜேந்திரன், இராமநாதபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சோமசுந்தரம் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் அருள்தாஸ்புரம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜை



மதுரை, நவ.13-

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது..

மதுரை மாநகராட்சி அருள்தாஸ்புரம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்வில் ஆணையாளர் திருமதி. சித்ரா விஜயன், முன்னிலை வகித்தார்.

மதுரை மாநகராட்சியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மிகச்சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றில் சுகாதார த்திற்கும் முக்கிய த்துவம் கொடுக்கப்பட்டு மக்களை தேடி மருத்துவம், வருமுன் காப்போம் திட்டம் மற்றும் சிறப்பு மருத்துவ முகாம்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவைகள் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தும் வகையில் புதிய கட்டிடங்கள் மற்றும் புனரமைப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.22 அருள்தாஸ்புரம் பகுதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் தாய்சேய் நல மருத்துவம், குழந்தைகள் மருத்துவம், பொது மருத்துவம் உள்ளிட்ட அனைத்து மருத்துவ பரிசோதனைக்கு தினசரி அதிகமான பொதுமக்கள் வந்து செல்கிறார்கள். மருத்துவ மனைக்கு வரும் பொதுமக்களின் வசதிக்காக கூடுதலாக கட்டிடம் கட்டுவதற்கு திட்டமிடப் பட்டது. அதன்படி 15வது மத்திய நிதி திட்டத்தின் கீழ் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டுவதற்கான பூமி பூஜை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது. குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டுமான பணிகளை நிறைவு செய்ய பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும்.

இந்நிகழ்வில் துணை மேயர் திரு.தி.நாகராஜன், மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், நகர்நல அலுவலர் (பொ) மரு.பார்த்திப்பன், உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக், உதவி செயற்பொறியாளர் திரு.காமராஜ், முதன்மை மருத்துவ அலுவலர் மரு.ஸ்ரீகோதை, மாமன்ற உறுப்பினர்கள் மகாலெட்சுமி, திரு.கஜேந்திரகுமார் உட்பட மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




■ இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலராக வ.சங்கரநாராயணன் பொறுப்பேற்றார்.







# கீழக்கோட்டையில் பறவை மனிதர் சலீம் அலியின் பிறந்தநாள் தினக் கொண்டாட்டம்

காளையார் கோவில் நவ13-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் இந்திய பறவையியலின் தந்தை சலீம் அலியின் பிறந்தநாள் தினக் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. பள்ளியின் தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி முன்னிலை வகித்தார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சிவகங்கை மாவட்டச் செயலாளர் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி உலகப் புகழ்பெற்ற இந்திய பறவையியல் வல்லுனரும் இயற்கை ஆர்வலருமான பறவை மனிதர் என்று அழைக்கப்படுகின்ற சலீம் அலியின் பிறந்தநாள் தினத்தில் அவருக்கு புகழாரம் சூட்டினார். இந்தியாவின் பறவைகளைப் பற்றி விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட பம்பாய் இயற்கை வரலாற்று சங்கத்தின் புரவலராக இருந்த சலீம் அலி இந்திய பாகிஸ்தான் நாட்டு பறவைகளின் கையேடு என்ற புத்தகத்தையும் ஒரு சிட்டுக்குருவியின் வீழ்ச்சி என்ற தன்வரலாற்று நூலையும் இந்த உலகிற்கு பரிசாக வழங்கியவர் என்றும் இந்திய பறவையியலின் தந்தை என்றும் போற்றப்பட்டு இன்றும் நினைவு கூறக்கூடிய ஒருவராக இருக்கிறார் என்றார். மாணவ மாணவிகளுக்கு பறவை மனிதர் சலீம் அலியின் புகழ் பரப்பும் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக காண்பிக்கப்பட்டது. பள்ளி வளாகத்தில் இன்னும் அதிகமாக மரங்களை நட்டு பறவைகள் வாழும் இடமாக மாற்ற வேண்டும் என்று மாணவ மாணவிகள் உறுதி ஏற்றுக் கொண்டனர். தொடர்ந்து மகிழ் முற்றம் சார்பாக சிறப்பான செயல்பாடுகளை முன்னெடுத்த நெய்தல் அணியானது தலைமை ஆசிரியை மற்றும் ஆசிரியர்களால் பாராட்டப்பட்டார்கள். ஆசிரியை கமலம்பாய் நன்றி கூறினார்.




# கோவை மாவட்டம் நெ.4, வீரபாண்டி பேரூராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்"

கோவை, நவ.13-

கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் அருகே நெ.4, வீரபாண்டி பேரூராட்சி 1,2,6,7,8,9 ஆகிய வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கான குறைகளை தீர்க்கும் "உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை பேரூராட்சி மன்ற தலைவர் வி.பத்மாவதி தலைமை தாங்கி பொதுமக்களிடம் மனுக்கள் பெற்று துவக்கி வைத்தார். பேரூராட்சி செயல் அலுவலர் உமாராணி முன் னிலை வகித்தார். முகாமிற்கு வருகை புரிந்தவர்களை திமுக நகர கழக செயலாளர் வி.சுரேஷ் வரவேற்றார். முகாமில் வார்டு கவுன்சிலர்கள் சிவகுமார், பரமேஸ்வரி, மல்லிகா, சித்ராதேவி, திவ்யா மற்றும் திமுகவினர் வடக்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் ராஜேந்திரன், பேரூர் கழக அவைத் தலைவர் ஆனந்தராஜ், பொருளாளர் கார்த்திகேயன் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி வைத்து சிறப்பித்தார்கள். நிகழ்வில் கூடலூர் நகர மன்ற தலைவர் அ.அறிவரசு கலந்து கொண்டு முகாமை பார்வை யிட்டு பொதும க்களிடம் குறைகளை கேட்டு அறிந்து உடனடியாக தீர்வு காண கோரி அரசு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தார். இம்முகாமில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு மகளிர் உரிமைத் தொகைக்காக நீண்ட நேரம் காத்திருந்து விண்ணப்பித்தார்கள். நிகழ்வில் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.



பூவாணிக்குப்பம் பகுதியில் ஏற்பட்ட சாலை விபத்தில்

# காயமடைந்து கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்

கடலூர், நவ.13-

மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா ஆகியோர் முன்னிலையில் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், பூவாணிக்குப்பம் பகுதியில் தனியார் பேருந்து மற்றும் வேன் மோதி ஏற்பட்ட சாலை விபத்தில் காயமடைந்து கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

பூவாணிக்குப்பம் சாலை பகுதியில் தனியார் பேருந்து மற்றும் முந்திரிகொட்டை உடைப்பதற்கு ஆட்களை ஏற்றிவந்த தனியார் வேன் ஒன்றுக்கொன்று மோதி விபத்து ஏற்பட்டது. இவ்விபத்தில் பேருந்து மற்றும் வேனில் பயணம் மேற்கொண்ட சுமார் 24 நபர்கள் கடலூர் தலைமை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் ஒருவர் மட்டும் பலத்த காயமடைந்து மேல்சிகிச்சைக்காக புதுச்சேரி ஜிப்மர் மருத்துமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்தின் காரணமாக கடலூர் அரசு தலைமை மருத்துமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களை மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். மேலும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் நல்ல முறையில் உயர்தரமான சிகிச்சையளித்து அவர்கள் நலம்பெற்று விரைவில் வீடு திரும்புதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் மாநகராட்சி துணை மேயர் திரு.பா.தாமரைச்செல்வன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் உள்ளனர்.



# சிங்கம்புணரி ஒன்றியத்திற்குட்பட்ட சிவபுரிபட்டி ஊராட்சியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது

சிவகங்கை, நவ.13-

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிவபுரிபட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன.

மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெறவேண்டும் என்பது குறித்தும் பொதுமக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பார்த்து, அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு பயன்பெறவேண்டும்.



■ மதுரை மாவட்டம், டாக்டர்.எம்.ஜி.ஆர். விளையாட்டரங்கத்தில் வரும் 28.11.2025 முதல் 10.12.2025 வரை 14வது ஹாக்கி ஆடவர் ஜூனியர் உலகக்கோப்பை நடைபெறுவதை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவின் குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார். மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் உடன் உள்ளார்.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.22 தத்தனேரி மயானத்தில் தூய்மை பணிகள் குறித்து ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக், மாமன்ற உறுப்பினர் மகாலெட்சுமி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ரூ.9 கோடி மதிப்பீட்டில் மருதம் பூங்கா அமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார்

கடலூர், நவ.13-

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், பெ.குமாரவேல் பாண்டியன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ம.சிந்தனைச்செல்வன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா ஆகியோர் முன்னிலையில் ரூ.9 கோடி மதிப்பீட்டில் மருதம் பூங்கா அமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார்.




வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு இயற்கையான மற்றும் சுகாதாரமான வாழ்க்கை சூழலை ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதற்காகவும், பசுமை நிலப்பரப்பை அதிகரித்திடவும், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் மூலம் நகரப்பகுதிகளில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய மக்களுக்கு பயனளிக்கும் வகையிலான இயற்கை யான சூழல் நிறைந்த பூங்காக்கள் அமைக்கப்படுகிறது.

ஐந்திணைகளில் ஒன்றான, வயலும் வயல் சார்ந்த பகுதியான மருத நிலத்தின் மக்களின் வாழ்வியல் மற்றும் இயற்கை வளங்களை பறை சாற்றும் பொருட்டு மருதம் பூங்காவனது 2024 25ஆம் ஆண்டு வேளாண் நிதிநிலை அறிக்கையின்படி கடலூர், செம்மண்டலம் பகுதியில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் வாயிலாக 14.16 ஏக்கர் பரப்பளவில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டிலும், தாழ்வாக உள்ள இப்பகுதியில் கூடுதல் மண்களை கொண்டு மேம்படுத்திட சமூக பொறுப்புணர்வு நிதியின் மூலம் 2.50 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.9 கோடி மதிப்பீட்டில் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இப்பூங்காவில் எழில்மிகு நுழைவாயிலுடன் பல்வேறு வகையான கண்களை கவரும் வண்ண மலர் தோட்டங்கள், அழகிய செடி சிற்ப தோட்டங்களை உள்ளடக்கிய பாறை தோட்டம், இயற்கை பிண்ணனியுடன் கூடிய இசை தோட்டம் மற்றும் பல்வேறு சிற்பங்களுடன் கூடிய பாதுகாப்பான சிறுவர் விளையாடும் அம்சங்களுடன் அமையவுள்ளது. மேலும் இப்பூங்காவில் இயற்கை குளிர்ச்சியுடன் இளைப்பாற நடந்திட நடைபாதை, நீர்வீழ்ச்சியுடன் கூடிய குளங்கள் மற்றும் இசை நீருற்று ஆகியன பார்வையாளர்களை கவரும் வண்ணம் அமையவுள்ளது.

பொதுமக்கள் மற்றும் சிறுவர்கள் கண்டுகளிக்கும் பொருட்டு பல்வேறு வகையான பறவைகள் கூடம் இப்பூங்காவில் அமையவுள்ளது. மேலும், சுற்றுச்சூழலினை காத்தல், சூழலியல் குறித்த கற்றல், மக்களை இயற்கையோடு இணைத்தல் ஆகியவற்றினை நோக்கமாக கொண்டு மருதம் பூங்கா அமைக்கப்படவுள்ளது. மருதம் பூங்கா சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பசுமை வளர்ச்சி மற்றும் மக்களின் நலனுக்காக உருவாக்கப்படவுள்ளது.

மாவட்டத்தின் வளர்ச்சிக்கு நகரப் பகுதிகளை விரிவாக்கம் செய்யவும் மேம்படுத்திடவும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தேவனாம்பட்டினம் கடற்கரையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரிக்கும் வகையில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சியின் வளர்ச்சிக்காக சாலைகள் விரிவுப்படுத்தப்படுத்தும் பணிகளும், மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறு மேம்படுத்தப்பட்ட சாலைகள் பொலிவுறும் வகையில் மின்கம்பத்துடன் கூடிய 128 அலங்கார மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. கடலூர் அருகிலுள்ள கொடுக்கன்பாளையத்தில் தோலில்லா காலனி தொழிற்சாலை வெகுவிரைவில் அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் சுற்றுவட்டாரப் பகுதிகளிலுள்ள சுமார் 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப்படவுள்ளது என மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி துணைமேயர் பா.தாமரைச்செல்வன், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை கூடுதல் இயக்குநர் சாந்தா செலின் மேரி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் மு.லெட்சுமிகாந்தன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் சௌ. அருண், துறை சார்ந்த அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# கடையம் அருகே 10 அடி மலைபாம்பு பிடிபட்டது

கடையம், நவ.13-

கடையம் அருகே பாப்பன்குளம் கிராமத்தில் பிரசித்திபெற்ற சங்கரநாராயணசுவாமி கோயில் உள்ளது. அதன் பின்புறம் சுமார் 10 அடி நீள மலைப்பாம்பு நடமாட்டம் தென்படுவதாகவும் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் ஆலங்குளம் தீயணைப்பு நிலைய அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

வீரர்கள் விரைந்து வந்து பார்த்தபோது கோயிலின் பின்புறம் 10 அடி நீளமுள்ள மலைப்பாம்பு பதுங்கி இருந்தது. மலைப்பாம்பை ஆலங்குளம் தீயணைப்பு சிறப்பு நிலைய அலுவலர் விசுவநாதன் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் திருமலைகுமார், சிவமணிராஜன், மெக்கானிக் ராஜேந்திரன் மற்றும் பெருமாள் ஆகியோர் பிடித்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

# கும்பகோணம் சார்பில் நாகூர் தர்கா கந்தூரி விழாவை முன்னிட்டு 100 சிறப்பு பேருந்துகள் இயக்கம்

சென்னை, நவ.13-

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் சார்பில் நாகூர் தர்கா கந்தூரி விழாவை முன்னிட்டு 100 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது என நிர்வாக இயக்குநர் க.தசரதன் தகவல் தெரிவித்துள்ளார். நாகப்பட்டினம் மாவட்டம் புகழ்பெற்ற நாகூர் தர்கா கந்தூரி விழா 21.11.2025 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கி 30.11.2025 அன்று சந்தனகூடு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற உள்ளது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து நாகூர் கந்தூரி திருவிழாவை முன்னிட்டு பொதுமக்கள் வருகைதர உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆணைக்கிணங்கவும், போக்குவரத்துத்துறை அமைச்சரின் வழிக்காட்டுதலின்படியும் நாகூர் கந்தூரி திருவிழாவினை முன்னிட்டு 21.11.2025 முதல் 01.12.2025 வரை சென்னை, திருச்சி, கரூர், புதுக்கோட்டை, மதுரை, சிதம்பரம், இராமநாதபுரம், தஞ்சாவூர், கும்பகோணம் ஆகிய ஊர்களிலிருந்தும், நாகப்பட்டினம் நாகூர் மற்றும் காரைக்கால் நாகூர் வழித்தடத்திலும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் கோட்டம் மூலம் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது.

மேலும், தினசரி இயக்கப்பட்டு வரும் 127 பேருந்துகள் வாயிலாக 335 நடைகளுடன் 21.11.2025 முதல் 01.12.2025 வரை கூடுதலாக 100 சிறப்பு பேருந்துகள் இயக்கிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சிறப்பு பேருந்து இயக்கத்தினை ஒருங்கிணைக்க நாகூர் மற்றும் நாகப்பட்டினம் பேருந்து நிலையங்களில் விசாரணை மையங்கள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# ‘கபட நாடகம் ஆடும் அவல ஆட்சி’ திமுகவை சரமாரியாக சாடிய விஜய்

சென்னை, நவ.13-

‘எல்லா வகையிலும் கபட நாடகம் ஆடும் அவல ஆட்சியின் லட்சணங்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவோம். மக்கள் சக்தியின் மதிப்பை, வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் மக்களுடன் மக்களாக இணைந்து நின்று, இந்த அவதூறு மன்னர்கள் உணரச் செய்வோம்‘ என திமுகவை தவெக தலைவர் விஜய் விமர்சித்துள்ளார்.

தவெக தலைவர் விஜய் இன்று (நவ.12) வெளியிட்ட அறிக்கையில் திமுக என்ற கட்சிப் பெயரைக் குறிப்பிடாமலேயே அதன் கொள்கை, கோட்பாடுகள், நிலைப்பாடு, ஆட்சி அதிகாரம் என எல்லாவ ற்றையும் மிகக் கடுமையாகச் சாடியுள்ளார்.

தனது விக்கிரவாண்டி வி.சாலை முதல் மாநாடு தொட்டே தவெக தலை வர் விஜய், திமுகவை கடுமையாக விமர்சித்து வருகிறார். கரூர் சம்பவத்துக்குப் பின்னர் சரியாக ஒரு மாதம் நிறைவுற்றதும் மீண்டும் திமுக மீதான கடுமையான விமர்சனங்களை முன்வைக்க ஆரம்பித் துள்ளார். அந்த வரிசையில் இன்றைய அறிக்கை இணைந்துள்ளது.

விஜய் இன்று வெளியிட்ட அறிக்கையில், “சமீப காலமாக, ஆட்சி அதிகாரத்தில் இருந்து அதிவிரைவில் மக்களால் தூக்கி எறியப்படப் போகும் அதிகார மமதை கொண்ட கட்சி ஒன்று, அவசர கதியில் தனக்குப் பழக்கமான அவதூறு அரசியல் ஆட்டத்தைத் தொடங்கி உள்ளது. எந்தக் கட்சியைச் சொல்கிறோம் என்று தெரிகிறதா? அவதூறு ஒன்றையே அடிப்படை அரசியல் கோட்பாடாகக் கொண்ட கட்சி வேறு எந்தக் கட்சியாக இருக்கும் என்று சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

இப்போதெல்லாம் அந்தக் கட்சியின் ஒரே இலக்கு, நம்மைத் தூற்றுவதே. தமிழக வெற்றிக் கழகத்தை மட்டும் மூளையில் தேக்கி யோசிப்பதே அதன் முழுநேர வேலை என்றாகிவிட்டது.

அவர்களுக்கு, 1969க்குப் பிறகு, அவதூறுதான் அரசியல் கொள்கை. லஞ்ச லாவண்யம், ஊழல்தான் லட்சியக் கோட்பாடு. இந்நிலையில், மக்களுடன் மக்களாக இதயப்பூர்வமாக இரண்டறக் கலந்த பிறகே மாபெரும் மக்கள் சக்தியுடன் அரசியலுக்கு வருகிற நம் போன்ற ஓர் இயக்கத்தைக் கண்டால், அவர்களின் மூளை மழுங்கி முனகத்தானே செய்யும்?



ஆம். அவர்களை நாம் விமர்சிப்பதாக எண்ணித்தான் அர்த்தமற்ற குற்றச்சாட்டுகளை அள்ளி வீசிக் கொக்கரிக்கின்றனர். உண்மையில் நாம், அவர்கள் மீது இன்னும் முழுமை யான விமர்சனத்தைத் தொடங்கவே இல்லை. மாறாக, மிக லேசான விமர்சனங்களைத்தான் வைத்தோம். அதுவும் நசுங்காத நாகரிகத்துடன் வைத்தோம்.

நாம், அவர்கள் மீது வைக்கின்ற மிக லேசான விமர்சனங்களுக்கே மக்கள் மிக பலமான வரவேற்பை அளிக்கத் தொடங்கி உள்ளனர். அதைக் கண்டு அஞ்சி நடுங்கியதால்தான், தங்கள் எண்பேராயம் மற்றும் ஐம்பெருங்குழுக்களைக் கொண்டு அதிரி புதிரியாக ஆலோசித்தும் நம் மீது மக்கள் ஏற்றுக்கொள்ளும் எந்த ஒரு விமர்சனத்தையும் வைக்கவே இயலவில்லை. அத்தகைய இயலாமையில், அந்தக் கட்சியின் தலைவர் கைக்கொண்டதுதான் ‘எந்தக் கொம்பனாலும் எங்களை, எங்கள் ஆட்சியை வீழ்த்த முடியாது’ என்கிற அதிகார மயக்க முழக்கம்.

தங்களைக் கொள்கை வாதிகளாக அடிக்கடி காட்டிக் கொள்வதற்காக, எல்லோரையும் ஏமாற்றுவதற்காக, தமிழ்நாடு, தமிழ் மொழி, தமிழினம்தான் தங்கள் உயிர் என்றும் மண், மொழி, மானம்தான் தங்கள் தலையாய கொள்கை என்று ஒரு சம்பிரதாயச் சங்கை முழங்கத் தொடங்கி உள்ளார், அக்கட்சியின் தலைவர்.

போதாதென்று, அறிவுத் திருவிழா என்ற பெயரில் பரண்களில் கிடக்கும் பழைய ஓலைகளைத் தூசு தட்டித் தோரணம் கட்டப் பார்க்கும் அவர்களின் பழைய மற்றும் புதிய கொள்கை உறுதி பற்றிக் கொஞ்சமே கொஞ்சம் பார்க்கலாமா? யாரை ஏளனமாகப் பரிகாசம் செய்தார்களோ அவர்களிடமே பதவிக்காகப் பம்மினரே, அப்போது எங்கே போயிற்று மானம்?

ஆட்சியில் இல்லாதபோது ‘தமிழ் தமிழ்’ என்பதும், ‘தமிழர் தமிழர்’ என்பதும், ஆட்சிக்கு வந்ததும் அதிகாரப் பதவிகளுக்குள் அடக்கமாக அமர்ந்துகொண்டு, அரசியல் சாசனக் கட்டுப்பாடுகள் மீது பழி போட்டுப் பதவி சுகம் காணும்போது எங்கே போனது மண், மானம் மற்றும் மொழி மீதான கொள்கைப் பாசம்?. சாதிவாரிக் கணக்கெடுப்பு ஆய்வை நடத்தாமல் மாநில அரசுக்கு அதிகாரமில்லை என்ற அர்த்தமற்ற வாதத்தை வைத்துத் தப்பிக்கும்போது, எங்கே போனது அவர்களின் சமூக நீதிக் கொள்கை?

அறிவுத் திருவிழா என்று பெயர் வைத்துவிட்டு, முழுக்க முழுக்க, தமிழக வெற்றிக் கழகத்தை மட்டுமே மறைமுகமாகத் திட்டும் திருவிழாவாக அதை மாற்றியதிலேயே அது அறிவுத் திருவிழாவாக இல்லாமல் அவதூறுத் திருவிழாவாகத்தானே மாறியது?

பெரியார், அண்ணா கொள்கைகளை மறந்துவிட்ட அவர்கள், மதச்சார்பற்ற சமூக நீதிக் கொள்கைகளோடு களம் இறங்கி, யாருக்கும் எதற்கும் வளையாமல் வலம் வரும் தமிழக வெற்றிக் கழகத்தைப் பார்த்து, கொள்கையற்றவர்கள் என்று கூறுவதற்கான காரணம் அவர்களுக்கு ஏற்பட்ட உளைச்சலும் குமைச்சலுமன்றி வேறென்ன?

53 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும், ஆட்சி அதிகாரத்தைப் பகல் கனவாக்கப் போகும் ஒரு ‘பக்கா மாஸ்’ கட்சி வந்திருப்பதைக் கண்டு நாள்தோறும் நாக்குழறி, உளறும் அவர்களுக்கு நாம் சொல்வதெல்லாம் என்ன தெரியுமா?

பவளவிழா பாப்பா நீ

பாசாங்கு காட்டல் ஆகாது பாப்பா

நீ நல்லவர்போல நடிப்பதைப் பார்த்து

நாடே சிரிக்கிறது பாப்பா.

நேற்று நடந்த சிறப்புத் தீவிரத் திருத்தத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில்கூட யாரை விமர்சிக்க வேண்டுமோ அவர்களை விமர்சிப்பதைவிட, நம்மைத் திட்டவைத்து அகமகிழ்ந்ததே நடந்தது.

எல்லா வகையிலும் கபட நாடகம் ஆடும் அவர்களது அவல ஆட்சியின் லட்சணங்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவோம். மேலும், மக்கள் சக்தியின் மதிப்பை, வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் மக்களுடன் மக்களாக இணைந்து நின்று, இந்த அவதூறு மன்னர்கள் உணரச் செய்வோம்” எனத் தெரிவித்தார்.

# மனிதருள் மாணிக்கமாய் திகழ்ந்த மகத்தான மனிதர்

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன் தலைநகர் புது டெல்லி அருகிலுள்ள காசியாபாத் ரயில் நிலையத்தில் அலை கடலென மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. அதற்குக் காரணம் ரயிலில் வந்திறங்கிய ஒரு தலைவரை நேரில் காணவும், மாலையிட்டு மரியாதையுடன் வரவேற்கவும் தான். ரயில் நிலையத்தில் பணியாற்றிய துப்புரவு தொழிலாளி ஒருவரும் அத்தலைவரைக் காண கூட்டத்தில் முண்டியடித்து வந்து கொண்டிருந்தார். ‘ துப்புரவுப் பணியை மேற் கொள்ளும் நீ எல்லாம் எங்களுடன் நிற்கலாமா ? அருகில் வராதே, ஓரமாக சென்று விடு என கூட்டத்தினர் அவரை விரட்டினர். நானும் மனிதன் தானே, சக மனிதர்கள், நான் செய்யும் பணியை வைத்து என்னை இப்படி ஒதுக்குகிறார்களே, வெறுக்கிறார்களே என்று மனம் வெதும்பி ஓரமாய் நின்றார். வந்திருந்த தலைவரோ அனைத்து காட்சிகளையும் கண்டவராய், காவல்துறை அதிகாரிகளையும், பெருங்கூட்டத்தையும் விலக்கிவிட்டு அந்த துப்புரவுத் தொழிலாளி நின்றிருந்த இடத்தை நோக்கி விரைந்து வந்தார். என் இந்திய சகோதரனே ! என்னைப் பார்க்க விரும்பிய நீ ஏன் ஒதுக்குப்புறமாக நிற்கிறாய் ? இதோ உன் அருகிலேயே நிற்கிறேன். உன் ஆசை தீர என்னைப் பார் என்றவர் துப்புரவு தொழிலாளியின் தோளில் கை போட்டவாறு நின்று புகைப்படக் கலைஞர்களை அழைத்து தங்களை புகைப்படம் எடுங்கள் என்றார். அந்த உன்னதத் தலைவர் வேறு யாரும் அல்ல, மனிதருள் மாணிக்கமாக திகழ்ந்த இந்திய விடுதலைப் போராட்ட வீரரும், சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமருமான ஜவஹர்லால் நேரு தான் .

மாபெரும் மாளிகை போன்ற வீட்டில் மின்சார வசதி, நீச்சல் குளம், பரந்து விரிந்த தோட்டம், டென்னிஸ் மைதானம் என் அனைத்தும் இடம்பெற்றிருந்த மாளிகை போன்ற வீடான ஆனந்த பவனத்தில் ஆடம்பரமான வாழ்க்கைக்கு சொந்தக்காரர் தான் 1889 இல் அலகாபாத்தில் (பிரயாக்ராஜ்) பிறந்த ஜவஹர்லால் நேரு. ஆனால், தன் உயிரை துச்சம் என மறந்து, செல்வ செழிப்பு மிக்க வாழ்க்கையைத் துறந்து, முப்பது ஆண்டுகள் இந்திய விடுதலைப் போரில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டார்.

தன் வீட்டிலேயே கல்வி கற்று வந்த நேரு 15 வது வயதில் இங்கிலாந்துக்குச் சென்று ஹாரோ பப்ளிக் பள்ளியில் கல்வி கற்றார். அதன் பின் லண்டனில் உள்ள புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பயின்றார். கல்லூரிப் படிப்பை முடித்த ஜவஹர் பாரிஸ்டர் (வழக்கறிஞர்) பட்டமும் பெற்றார்.

வழக்கறிஞர் பணியை மேற்கொள்வதை விட





நாட்டு விடுதலைப் போராட்டத்திலேயே ஜவஹரின் சிந்தனை இருந்தது. பல்வேறு போராட்டங்களில் தன்னை இந்திய விடுதலைப் போராட்டங்களில் இணைத்துக் கொண்டார். நாட்டு விடுதலைக்காக போராடியதற்காக பல சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட நேரு ஒன்பது ஆண்டுகள் (3259 நாட்கள்) சிறைத் தண்டனையை அனுபவித்தார்.

வன்முறை எக்காலத்திலும் நன்மை தராது. நம்முடைய வளர்ச்சி அமைதியும், கூட்டுறவும், சகிப்புத்தன்மையும் சேர்ந்து உருவாகியதாக இருப்பதே சிறப்பு. தனிமனிதர்களாக இருக்கும் நாம் தேசத்தின் அங்கமாகவும் அடையாளமாகவும் இருக்க வேண்டும். எந்த சக்தியும் நமக்குள் பிரிவினையை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்று நேரு பெரிதும் விரும்பினார்

தன்மகள் இந்திராவுக்கு அவர் எழுதிய சிறைக் கடிதங்கள் உலக வரலாறு ஒரு பார்வை என் தலைப்பில் இரண்டு பாகங்களாக தொகுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்திரா துணிச்சல் மிக்க உலகம் போற்றும் இரும்பு பெண்மணியாக விளங்க நேருவின் கடிதங்களே உரமூட்டின.

உலகின் பாதுகாப்பான எதிர்காலம் அறிவியலின் கையில் தான் உள்ளது என்பதை நேரு நம்பினார். அறிவியல் மனப்பான்மை என்னும் சொல்லை அறிமுகம் செய்தவரும் அவர்தான். ஒவ்வொரு மனிதனும் அறிவியல் பூர்வமாக சிந்திக்க வேண்டும் என்று விரும்பினார். இந்தியாவை கண்டறிதல் என்கிற தன் நூலில் அறிவியல் குறித்த ஏராளமான கருத்துக்களை பதிவு செய்துள்ளார்.

இந்திய விடுதலைக்கு முன்னரே 1937 இல் கொல்கத்தாவில் தேசிய அறிவியல் கழகத்தை நேரு தொடங்கி வைத்தார். நாட்டில் உள்ள மூடநம்பிக்கை, சாதி மத பாகுபாடு, பசி, வறுமை, சுகாதாரக் கேடு, கல்வி வளர்ச்சியின்மை, பொருளாதார ஏற்றத்தாழ்வு ஆகியவற்றிலிருந்து நாட்டைக் காக்கும் அபூர்வ சக்தி அறிவியலுக்கே உள்ளது என்று முழுமையாக நம்பினார்.

ஹோமி ஜஹாங்கீர் பாபா தலைமையில் இந்தியாவில் அணுவியல் ஆய்வு மையமும், விக்ரம் சாராபாய் தலைமையில் விண்வெளி ஆய்வு மையமும் தொடங்க நேரு எடுத்த பெரும் முயற்சியே காரணமாக அமைந்தது. நாடு முழுவதும் 17 தேசிய அறிவியல் ஆய்வுக்கூடங்களை சாந்தி ஸ்வரூப பட்னாகர் தலைமையில் அமைத்ததும் நேரு தான்.

நேருவின் பஞ்சசீலக் கொள்கை இந்தியாவை உலக அளவில் புகழ் பெற வைத்தது . அணி சேரா கொள்கையை உருவாக்கி உலக நாடுகளை வியக்க வைத்தார். ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் நாட்டு வளர்ச்சிக்கு வித்திட்டார்.

நேஷனல் புக் டிரஸ்ட்ட்ரஸ்ட், சாகித்ய அகாடமி ஆகிய இலக்கிய அமைப்புகளையும் ஏற்படுத்தி இந்திய மொழிகளின் இலக்கியங்களை சிறப்புற செய்தவர் நேரு.

நாடு விடுதலை அடைந்தது முதல் மே 27, 1964 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 17 ஆண்டுகள் இந்திய நாட்டின் பிரதமராக இருந்து நாட்டை முன்னேற்ற பாதையில் அழைத்துச் சென்ற பெருமைக்குரியவராக இருக்கிறார் ‘ ஆசிய ஜோதி ‘ என போற்றப்பட்ட நேரு எங்கு சென்றாலும் குழந்தைகளை சந்திப்பதை தனது தலையாய கடமையாகக் கருதினார். ஒருமுறை ஒரு வியாபாரி வைத்திருந்த அனைத்து பொம்மைகளையும் வாங்கிய நேரு அவற்றை தெருவோர குழந்தைகளுக்கு கொடுத்து அவர்களை மகிழ்வித்து தானும் மகிழ்ந்தார். குழந்தைகள் எதிர்காலத்தில் தலைசிறந்தவர்களாக விளங்கிட தொடக்கக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார். தான் விரும்பும் ரோஜா மலர்களுக்கு இணையாக குழந்தைகளையும் பெரிதும் விரும்பினார். ரோஜா மலர்கள் போல் குழந்தைகளும் எப்போதும் உற்சாகத்துடன் இருக்க வேண்டும் என்பதையும் எண்ணினார். நேரு மீது கொண்ட பேரன்பினால் குழந்தைகள் அவரை நேரு மாமா என்று அழைத்தனர்.

நேருவின் பிறந்த தினமான நவம்பர் 14 ஆம் நாள், 1954 ஆம் ஆண்டு முதல் குழந்தைகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைய தினம் 5,000 குழந்தைகள் நாடெங்கும் இருந்து வந்து டெல்லி தேசிய மைதானத்தில் கூடியிருக்கும் செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்த நேரு அவர்களை நேரில் சந்தித்து தன் மகிழ்ச்சியை ஆரவாரத்தோடு வெளிப்படுத்தினார். விழாவில் கலந்து கொண்ட குழந்தைகள் ஏழை, வசதியானவர்கள், கொத்தடிமை குடும்பங்களை சார்ந்தவர்கள் என பல சூழலில் இருந்து வந்திருந்தனர். குழந்தைகளின் உணர்வுகளையும், புன்னகையையும் அறிந்த நேரு அவர்களின் வேண்டுகோளையும் ஏற்றுக்கொண்ட காரணத்தினாலேயே அந்த ஆண்டு முதல் பிறந்த தினம் நாடெங்கும் ‘ குழந்தைகள் தினமாக ‘ கொண்டாடப்பட்டு வருகிறது. பள்ளிகளில் குழந்தைகளுக்கு பல்வேறு கலை, இலக்கிய, விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு அவர்களின் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வதோடு அவர்களின் அறிவாற்றலையும் வெளிப்படுத்தும் தினமாக அந்த நாள் அமைந்து வருகிறது.



**ம. பிரபு**
ஆசிரியர் - எழுத்தாளர்
கல்லல் முருகப்பா
மேல்நிலைப்பள்ளி, கல்லல்,
சிவகங்கை மாவட்டம்,
அலைபேசி: 9944089151

## நத்தம் பேரூராட்சியில் போலி இறப்பு சான்றிதழ் மூலம் 85 வயது மூதாட்டியின் சொத்துக்களை அபகரித்தவர் மீது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு

திண்டுக்கல், நவ.13-

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பேரூராட்சி பகுதியில் நத்தம் சப்டி அயன் வேலாம்பட்டி கிராம நத்தம் டவுன் மீனாட்சியுரம் பழைய வார்டு எண் 1 புதிய வார்டு என் 15 காளியம்மன் கோவில் தெரு தற்போதைய கதவு எண் 15451 ல் அமைந்துள்ள பழுதான காரை ஓட்டு வீட்டின் (முன்னாள் சர்வே எண் 183), தற்போதைய G. சர்வே எண் 411/2ல் கட்டுப்பட்ட நத்தம் மனையிடத்தை காசி சேர்வை என்பவரது மகன் செல்வகுமார்நில அபகரிப்பு செய்ததாக கருப்பையா சேர்வை என்பவரின் வாரிசுதாரர்களான பாண்டியன் சேர்வை என்பவரது மகள் குருவம்மாள் 85 வயது மூதாட்டி ஆவார். தனது தகப்பனார் பெயருடன் காசி என்ற



பெயரையும் சேர்த்து போலியாக காசி பாண்டியன் என இறப்பு சான்றிதழ் பெற்று செல்வகுமார் என்பவர் குருவம்மாளுக்கு சொந்தமான நிலத்தையும் அபகரிப்பு செய்ததாக இதற்கு இறப்புச் சான்றிதழ் வழங்கிய அதிகாரிகளும் நத்தம் பேரூராட்சி அதிகாரிகளும் உடந்தை என மேலும் இந்த விவகாரத்தில் பல்வேறு மோசடிகள் அரங்கேறி உள்ளதாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் இதில் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என குருவம்மாள் குடும்பத்தினர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று மனு அளித்துள்ளார்.




## பள்ளி மாணவர்களின் அறிவியல் கண்காட்சியில் மாணவர்கள் தயாரித்த ரோபோட்டிக் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன

### 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆயிரம் கண்டுபிடிப்புகளை காட்சிபடுத்தினர்

கிண்டி, நவ.13-

செங்கல்பட்டு மாவட்டம் கிண்டி செயிண்ட் தாமஸ் மலையில் உள்ள மாண்ட்போர்ட் பள்ளியில் MONTECH 2025 என்ற தலைப்பில் மாணவர்கள் புத்தாக்க கண்டுபிடிப்புகளின் அறிவியல் கண்காட்சி நடைப்பெற்றது.

பள்ளியின் பிரமண்டமான ஆடியோரியத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் கண்டுபிடிப்புகள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. கணிதம், தமிழ், அறிவியல் என பல்வேறு துறைகளிலும் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்களது புதிய கண்டுபிடிப்புகளை காட்சி படுத்தினர்.

இதில் சிறப்பு விருந்தினராக எஸ்.ஆர்.எம் பல்கலைகழக டீன் பிரவீன் குமார், செயிண்ட் தாமஸ் தேசிய புத்திதாலயத்தின் பங்குதந்தை மைக்கேல் ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிட்டார்.

இதில் மாணவர்களே தயாரித்த மின்சார மோட்டார் சைக்கிள், ரோபோட்டிக், தானியங்கி பார்க்கிங், உள்ளிட்ட பல்வேறு கண்டிபிடிபிடிப்புகளை தாயரித்து காட்சிபடுத்தியது பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. மேலும் தமிழ் துறை சார்பில் நடந்த கண்காட்சியில் நாட்டுபுற கலைகள் நடனம், பாரம்பரிய உணவு வகைகளும் இடம் பெற்றன.

இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பள்ளி முதல்வர் ஸ்டீபன் சேவியர் பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார்







## தாகூர் மருத்துவமனை மற்றும் மருத்துகல்லூரியின் 16வது ஆண்டு புதிய மாணவர்கள் வரவேற்பு நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைப்பெற்றது

செங்கல்பட்டு, நவ.13-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அடுத்த ரத்தினமங்கலத்தில் உள்ள தாகூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில், முதலாம் ஆண்டு மருத்துவ மாணவர்களை வரவேற்கும் விழா (Induction Day) திங்கள்கிழமை காலை நடைப்பெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக தாகூர் கல்வி குழும தலைவர் பேராசிரியர் டாக்டர் மாலா, செயலாளர் மணிகண்டன் மற்றும் கல்வி குழும துணை தலைவர் செல்வி ரக்ஷனா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

தாகூர் கல்வி குழும தலைவர் பேராசிரியர் டாக்டர் மாலா மாணவர்களிடம் தலைமை உரை ஆற்றும்போது,

“கல்வி என்பது பணியல்ல; அது பணிவாய்ந்த சேவை” என கூறிய அவர், மருத்துவ வாழ்க்கையில் கட்டுப்பாடு, பொறுப்பு, மரியாதை, கருணை ஆகியவை மாணவர்களின் அடையாளமாக இருக்க வேண்டியது என அறிவுரை வழங்கினார்.

துணை தலைவர் செல்வி ரக்ஷணா பேசும்போது, புதிய தலைமுறைக்கு தொழில்நுட்பம், புதுமை, ஆர்வம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வின் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முத்துகுமரன், துணை முதல்வர் கோபாலன், மருத்துவ கண்காணிப்பாளர் ஹபிப் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்



■ இந்தியாவில் 6வது நேஷனல் மருது வளரி இண்டோ பூமரங்கு இணைந்து நடத்திய வளரிப்போட்டி 8,9.11.2025 கோயமுத்தூரில் உள்ள MJRS கிரிக்கெட் கிரவுண்டில் நடைபெற்றது இந்தியாவில் 11 மாநிலங்களில் இருந்து கலந்து கொண்டனர் இதில் தமிழ்நாட்டில் 13 மாவட்டங்களில் இருந்து வளரி வீரர்கள் வீராங்கனைகள் கலந்து கொண்டனர் இதில் 6 விதமான போட்டிகள் நடைபெற்றது. அதில் தேனி மாவட்டம் போடிநாயக்கனூரைச் சேர்ந்த விருமன் சிலம்பம் மாஸ்டர் V பிரபு சில்லமரத்து பட்டி சேர்ந்த நாகராஜ் கலந்துகொண்டு 4 போட்டிகளில் பரிசினை பெற்று தேனி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்தனர்.

## செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் நகர சிட்லபாக்கம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொடி கட்டு பறக்கும் மூன்று சீட்டு லாட்டரி விற்பனை

செங்கல்பட்டு, நவ.13-

காவலர்களின் ஒத்துழைப்புடன் அமோகமாக நடைபெற்று வரும் லாட்டரி விற்பனையால் ஏழைத் தொழிலாளியின் குடும்பங்கள் வீதிக்கு வரும் அவலம் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகள் விற்பனையால் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் கொலை உள்ளிட்ட அசம்பாவிதங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் சென்னை குரோம்பேட்டை அடுத்த சிட்லபாக்கம் காவல் நிலையம் எல்லை குட்பட்ட பகுதிகளில் லாட்டரி சீட்டு விற்பனையானது அமுகமாக நடைபெற்று வருகிறது .

திரு வி க நகர் சிட்லபாக்கம் பிரதான சாலையில் வீட்டின் மாடி படிக்கட்டின் கீழ் பகுதியில் வைத்து விற்பனை செய்யப்படும் இந்த லாட்டரி



சீட்டு நடைபெறுகிறது.

போலீசாரின் மறைமுக உடந்தையால் விற்பனையாகும் சட்டவிரோத லாட்டரி விற்பனையா இளைஞர்கள், ஆட்டோ டிரைவர், கூலி தொழிலாளியின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது

பல இடங்களில் ரைட் நடைபெற்று வருவதாகவும் தற்போது நாம் அனைவரையும் சரி கட்டி விட்டதாக நம்மிடத்தில் தான் கூட்டம் கலை கட்டும் என மாற்றி விற்பனையின் போது அங்கிருந்த நபர்கள் பேசிய ஆடியோவும் பதிவாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சிட்லபாக்கம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் சட்ட விரோத லாட்டரி விற்பனையை தாம்பரம் மாநகர காவல் துறை ஆணையர் இரும்பு கடன் கொண்டு அடக்க வேண்டும் எனவும் இதற்கு உடந்தையாக இருக்கும் காவல் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

## கோவையில் ஜி.கே.என்.எம் மருத்துவமனையில் ஹைபெக் சிறப்பு கிளினிக் துவக்கம்

கோவை, நவ.13-

மேற்கு தமிழ்நாட்டில் புற்றுநோய் சிகிச்சை துறையில் ஒரு புதிய மைல்கல்லாக, பிரத்தியேக ஹைப்பர் தெர்மிக் இன்ட்ராபெ ரிட்டோ னியல் கீமோதெரபிசிறப்பு கிளினிக், ஜி.குப்புசாமி .நாயுடு நினைவு (ஜி.கே.என்.எம்) மருத்துவமனையில் துவங்கப்பட்டது. இந்த மையத்தை மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி டாக்டர். ரகுபதி வேனுசாமி துவக்கி வைத்தார். புற்றுநோய் துறை தலைவர் டாக்டர். பி. சிவநேசன் உடனிருந்தார். இதுவரை 25 ஹை பெக்சிகிச்சைகள் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளதால், ஜி.கே. என்.எம். மருத்துவமனை இப்பகுதியில் முன்னணி மையமாக திகழ்கிறது. ஹைபெக் சிகிச்சை கருப்பை, குடல், பெரு ங்குடல், இரைப்பை உள்ளிட்ட வயிற்றுப் பகுதியில் பரவும் புற்றுநோய்களுக்கு வழங்கப்படும் நவீன சிகிச்சை முறையாகும். இதில் முதலில்

சைட்டோரிடக்டிவ்




அறுவை சிகிச்சை(CRS) மூலம் புற்றுக் கட்டிகள் அகற்றப்பட்டு, பின்னர் கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலையில் வயிற்றுக்குள் கீமோதெரபி செய்யப்படுகிறது. இது புற்றுநோய் செல்களை நேரடியாக அழிப்பதோடு பக்க விளைவுகளை குறைக்க உதவுகிறது.

இந்நிகழ்ச்சியில் டாக்டர். பிரவீன் ரவிசங்கரன் (அறுவை புற்றுநோயியல் நிபுணர்) மற்றும் டாக்டர். பி. அருள்ராஜ் (ரோபோடிக் மற்றும் ஹைபெக்அறுவை சிகிச்சை நிபுணர்) ஆகியோர்,

ஒரே கூரையின் கீழ் பரிசோதனை, சிகிச்சை மற்றும் பிந்தைய பராமரிப்பு வசதிகள் அனைத்தும் ஒருங்கிணைந்த முறையில் வழங்கப்படுவது எங்கள் நோக்கம் என்று தெரிவித்தனர்.

புதிய ஹைபெக் மையத்தில் அறுவை, புற்றுநோயியல், மயக்கமருந்து, தீவிர சிகிச்சை, பிசியோதெரபி, உணவியல் மற்றும் நோய்த்தடுப்பு நிபுணர்கள் ஒருங்கி ணைந்து நோயாளிகளுக்கு முழுமை யான பராமரிப்பை வழங்க வுள்ளனர். ஜி.கே.என்.எம். மருத்துவமனை, வயிற்றுப் புற்றுநோய்களின் முன்னேற்றத்தை தாமதப்படுத்தும் இந்த சிகிச்சை குறித்த விழிப்பு ணர்வை பொதுமக்களிடையே உருவாக்கும் முயற்சிகளையும் தொடங்கியுள்ளது.

புதிதாக துவங்கப்பட்டுள்ள இந்த மையம், தென்னிந்தியாவில் ஹைபெக் சிகிச்சை க்கான முக்கிய மையமாக கோவை மாநகரின் மருத்துவ திறனை மேலும் உயர்த்தியுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161